வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண் 4242 / அ2/2023 நாள் 10.10.2023

பொருள் பள்ளிக்கல்வி – அகத் தணிக்கை அலுவலகங்கள் / பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் அகத்தணிக்கை தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்தல் தொடர்பாக – தொடர் நடவடிக்கை மற்றும் பள்ளிகளில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் - தொடர்பாக

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ஓ.மு.எண் 48853/அகத்தணிக்கை (நி.ஆ (ம) மு.க.அ) /2023-1 நாள் 28.09.2023

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி, பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் அனைத்து வகை பள்ளிகள் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட அகத் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தணிக்கை தடைகள் மீது உடன் நடவடிக்கை மேற்கொண்டு 2 மாதங்களுக்குள் அதற்கான முழுமையான அறிக்கையினை வேலூர் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி அதன் நகலினை பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு நேரடியாக அனுப்ப சார்ந்த தலைமைஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது..

மேலும் அகத் தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மீளவும் கீழ்க்கண்ட நெறிமுறைகள் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

இணைப்பில் காணும் நெறிமுறைகளில் பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு / நகரவை/ அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மீள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இச்செயல்முறைகள் மற்றும் நெறிமுறைகள் பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் தவறாமல் அளிக்குமாறு அனைத்து பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு –

அகத்தணிக்கை நிவர்த்திக்கான பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்.

// ஒப்பம் //

//செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்.

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்

அரசு /நகரவை / அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்

வேலூர் மாவட்டம்.

**நகல்**

சென்னை-6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.